அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :166 /2017
தேதி :27.12.2017

## தமிழர் தந்தைக்கு மேலும் ஓர் சிறப்பு

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், அவர் ஊடகத் தமிழில் ஏற்படுத்திய எழுத்து சீர்திருத்தத்தை 11ஆம் வகுப்பு தமிழ் பாட புத்தகத்தில் இணைக்கவிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ஊடகத் தமிழில் இவர் ஏற்படுத்திய எழுத்துச் சீர்திருத்தத்தை முதன் முதலில் தினத்தந்தி பத்திரிக்கையில் வெளிப்படுத்தியதன் விளைவாக, கிராமத்திலுள்ள எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருந்தது.

இத்தகைய ஊடகத் தமிழ் எழுத்து சீர்திருத்தத்தை மாணவர்கள் எளிமையாக கற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் 11ஆம் வகுப்பு தமிழ் பாடப்புத்தகத்தில் இடம்பெறும் என்று அறிவித்த தமிழக அரசுக்கு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த அறிவிப்பு தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்கள் தமிழ்மீது கொண்ட பற்றினை மாணவர்கள் மத்தியில் பறைசாற்றும் விதமாகவும், தமிழின் எளிய நடையினை உணர்ந்து மாணவர்கள் ஆர்வத்துடன் பயிலவும் , தமிழ்மொழி உலக அளவில் மேலும் சிறக்க உந்துதலாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com